கொழும்பு பல்கலைக் கழகம், இலங்கை

சட்ட பீடம்

சட்டமாணி பரீட்சை ஆண்டு IV, ~~2019~~ 2020

**கம்பனிச் சட்டம்**

(மூன்று மணித்தியாலம்)

<u>நான்கு</u> வினாக்களுக்கு <u>மட்டும்</u> விடை தருக.

இவ்வினாத்தாள் மொத்தமாக **ஏழு (07)** வினாக்களை கொண்டுள்ளதுடன் அவை **ஐந்து (05)** பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

---

1. COVID-19 இன் தோற்றமானது பல வியாபாரங்களின் மூடுகைக்கு காரணமாகவிருந்தது. ஆகவே இச்சூழ்நிலையில், இந்த உலகளாவிய தொற்றுநோய் காரணமாக கம்பனிகள் தாம் வங்குரோத்து நிலையினை அடைவதனைத் தடுப்பதற்காக தமது வியாபாரங்களை தொடர்ந்து கொண்டு நடாத்துவதில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனவே வணிகத்தினை மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் இலாப பாதையில் திருப்புவது ஆகியவை கம்பனிகள் மீதான முக்கிய பணிகளாகும்.

   மேற்கூறிய கூற்றினை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் இலங்கை கம்பனிகளுக்கு இருக்கக் கூடியதான நிறுவன மீட்பு (Corporate rescue) வழிமுறைகளுடன் தொடர்பு படுத்தி ஆராய்க.

   (25 புள்ளிகள்)

2. "...பெரும்பாலான வளர்ச்சியடைந்த சட்ட முறைமைகள் சட்ட ஆளுமையுடைய நபர் (corporate legal personality) என்பதனை அதன் சில தர்க்க ரீதியான தாக்கங்களின் மட்டுப்பாடுகளை ஒப்புக்கொள்கின்றதோடு அங்கீகரிக்கின்றன. சிவில் சட்ட நியாயாதிக்கங்களில், பொதுவாக உரிமைகள் துஸ்பிரயோகம் என்ற எண்ணக்கரு சட்ட பூர்வ அடிப்படையிலான விதிவிலக்காகும்....ஆங்கிலச் சட்டம் இவ்வகையான பொதுக் கோட்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அதனை ஒத்த விளைவினை அடையக் கூடிய பல்வேறுபட்ட குறிப்பிட்ட கோட்பாடுகள் அதிலே உள்ளன...."

Per Lord Sumption, in *Prest v Petrodel Resources Limited and Others* [2013] UKSC 34

சட்ட ஆளுமையுடைய நபர் என்பதனை கட்டுப்படுத்தும் அல்லது புறக்கணிக்கும் வகையில் ஆங்கிலச் சட்டத்தின் கீழ் உள்ளதான குறிப்பிட்ட கொள்கைகளை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க. உமது விடையானது நடைமுறை உதாரணங்களாலும் தீர்க்கப்பட்ட வழக்குககளாலும் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

(25 புள்ளிகள்)

3. Brightstar Ltd (கம்பனி) என்பதன் 65% பங்குகளை Creo 360 (Pvt) Ltd என்ற கம்பனியானது (Creo) சொந்தம் கொண்டுள்ளதுடன், ராம் பெர்னான்டோ என்பவர் 25% பங்குகளையும், சுனில் மற்றும் இந்திரன் ஆகிய இருவரும் மீதமுள்ள 10% இன் சமமான பங்குகளின் உரிமையையும் வைத்துள்ளர். 50% இற்கு மேற்பட்ட வாக்களிக்கும் உரிமையை பங்குகளை வைத்திருக்கும் பங்குநாரர்/பங்குதார்களினால் இயக்குனர்கள் நியமிக்கப்பட வேண்டுமென கம்பனியின் அமைப்பு அகவிதிகள் (Article of Association) ஏற்பாடு செய்திருந்தது. கம்பனி தனது பங்குதார்களுக்கு பங்குலாபம் விநியோகித்தலில் முறையற்ற ரீதியில் ஊக்கமளித்தாக ராம் பெர்ணான்டோ சந்தேகிக்கின்றான். இது கன்பனியின் அப்பங்குலாபக் காலப்பகுதியில் Creo கடுமையான நிதிநெருக்கடிக்கு உட்பட்டிருந்து என்ற வதந்தியின் காரணமாக அமைந்தது. கம்பனியின் இயக்குனர் சபையானது Creo வுடன் அதனது வணிக கட்டிடத்தினை சந்தை பெறுமதியினை விட அதிகமான விலைக்கு கொள்வனவு செய்வதற்கு விற்பனை ஒப்பந்தமொன்றில் ஈடுபட்டுள்ளது என்பதனை சுனில் மற்றும் இந்திரன் அறிந்தனர். மேலும், கம்பனியானது எப்போதும் கம்பனியின் தலைமை நிர்வாக அதிகாரியின் (CEO) அறிவுறுத்தல்களைப் பின்பற்றுகின்றது என்பதனையும் அத்தலைமை நிர்வாக அதிகாரியின் மனைவி மற்றும் இரண்டு புதல்வர்களுக்கு Creo சொந்தமானது என்பதனையும் அவர்கள் அறிந்தனர்.

பொருத்தமான நியதிச்சட்ட வாசகங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாக் கொண்டு கட்சிக்காரருக்குக் கிடைக்கக் கூடிய சாத்தியமான தீர்வுகளை ஆராய்க.

(25 புள்ளிகள்)

4. “கம்பனியின் சட்டவாட்சி (Corporate Governance) என்பது அனைத்து நலன்பெறுநர்களின் மதிப்பையும் மேம்படுத்தும் வகையில் கம்பனியின் வளங்களை ஒதுக்கீடு செய்வதனை நோக்காக கொண்ட செயல் முறையொன்றாகும் என்பதோடு வெளிப்படைத்தன்மை, உள்ளடங்கல், ஒப்பரவு மற்றும் பொறுப்பு குறித்த அவர்களின் முடிவுகளை மதிப்பீடு செய்வதன் மூலம் அவர்களை பொறுப்புக்கு உட்படுத்துகிறது என்பதுமாகும். இது

கம்பனியொன்றின் இயக்கம், நிர்வாகம், மற்றும் அதன் கட்டுப்பாடு ஆகியவற்றைப் பாதிக்கும் வழிவகையிலமைந்த செயல்முறைகள், வழக்காறுகள், கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நிருவகங்களின் தொகுப்பாகும்."

இலங்கையின் கம்பனிச் சட்டத்தினை ஆதாரமாக கொண்டு மேற்கூறிய கூற்றினை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்க.

(25 புள்ளிகள்)

5. நிமால் என்பவன் கனிய படிவுகள் தொடர்பான வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தான். தை மாதம் 2017இல், அவன் காரிய அகழ்வுச் சுரங்கமொன்றை (graphite mine) ரூபா. 50 மில்லியனுக்குக் கொள்வனவு செய்தான். நிமால் தனது நண்பன் பிமால் என்பவனுடன் இணைந்து அதே வியாபாரத்தினை தொடர கம்பனியொன்றை உருவாக்க முடிவு செய்தான். தை மாதம் 2018 இல், உத்தேசிக்கப்பட்ட கன்பனியானது Raini Private Limited (ரெய்னி) என்ற பெயரில் கூட்டிணைக்கப்பட்டதோடு அதற்கு நிமால் மற்றும் பிமால் ஆகியோர் ஆரம்ப இயக்குனர்களாகவும் இருந்தனர். பங்குனி 2018 இல், நிமால் தனக்கு சொந்தமான காரிய அகழ்வுச் சுரங்கத்தினை ரூபா 60 மில்லியனுக்கு ரெய்னிக்கு விற்பதற்கான உடன்படிக்கையொன்றில் ஈடுபட்டான். விற்பனை ஒப்பந்தம் செயலாக்கப்பட்டதன் பின், ஏற்றுமதிகளை மேற்கொள்வதற்காக ரெய்னி பொதுமக்களுக்கு பங்குகளை வழங்குவதற்காக முற்பகர்வினை விநியோகித்தது. கம்பனி காரிய அகழ்வுச் சுரங்கத்தினைச் சாதகமான விலைக்கு வாங்கியது என்பதான இயக்குனர்களின் கருத்தை அம்முற்பகர்வு வெளிப்படுத்தியது. கம்பனியானது தனக்குள்ள மதிப்புமிக்க காரிய அகழ்வுப் படிவுகள் காரணமாக விரைவில் பெரும் இலாபத்தை ஈட்டும் என்பது குறித்த நம்பிக்கையை வெளிப்படுத்தும் பிரபல்யமான கனியவியலாளரொருவனான திரு. சானுகாவின் கூற்றினையும் அது கொண்டிருந்தது. பொதுமக்களுக்கான பங்கு விநியோகமானது தேவைக்கு மேலதிகமாக சந்தாக்களைப் பெற்றதோடு (over-subscribed) கம்பனி தனது வியாபாரத்தை தொடந்து நடத்தி ஆரம்பத்தில் இலாபத்தையும் அடைந்தது. இயற்கைக் காரிய அகழ்வுச் சந்தை விலையானது எதிர்பாராத விதமாக வீழ்ச்சியடைந்ததால் கம்பனி நட்டத்திற்குள்ளானதுடன் அது கம்பனியின் பங்கு விலையில் சரிவு ஏற்படவும் காரணமாகவிருந்தது. கம்பனி சுரங்கத்தை அதிக விலைக்கு கொள்வனவு செய்தது என்றும் கம்பனியின் காரிய அகழ்வுப் படிவுகள் தரம் குறைந்தது என்பதனை வெளிப்படுத்தும் புதிய விஞ்ஞான ஆராய்ச்சியொன்று இருக்கின்றதென்பதனையும் பங்குதாரர்கள் பின்னர் அறிந்தனர்.

2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான பொதுச் சட்ட கோட்பாடுகளின் கீழ் நிமால் மற்றும் பிமாலுடைய பொறுப்புடைமையை ஆராய்க.

(25 புள்ளிகள்)

6. பாடசாலை மாணவர்களுக்குச் சீருடை வழங்கும் வியாபாரமொன்றில் ஈடுபடுவதற்காக அருள், பானு, மற்றும் டேவிட் ஆகியோர் Top Attires என்ற பங்குடைமை ஒன்றினை உருவாக்கினர். பங்குடைமை வியாபாரத்திற்குப் பொருத்தமான இடமொன்றினைத் தேடுமாறு அருள் வேண்டப்பட்டதுடன் அவன் நியாயமான விலைக்கு இடமொன்றினையும் கண்டு பிடித்தான். இருப்பினும், அவ்வியாபார நடவடிக்கையின் மூலம் தனக்குக் கிடைத்த தரகினை அருள் வெளியிடவில்லை. ஏனையவைகளுடன், Top Attires பங்குடைமை ஒப்பந்தமானது நிறுவனத்திற்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அதிகாரத்தினை பானுவிற்கு வழங்கியிருந்தாயினும் அவள் ஏனைய பங்காளர்களின் அனுமதியின்றி ரூபா 1 மில்லியனுக்கு மேலதிகமாக எதனையும் கொள்வனவு செய்ய முடியாதெனவும் ஏற்பாடு செய்திருந்தது. அவ்வாறான அனுமதியின்றி அவள் Modern Fabric Ltd என்பதனிடமிருந்து ரூபா 2 மில்லியன் பெறுமதியான சீருடை மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தாள். Top Attires நிதி தொடர்பான சிக்கல்களை எதிர்கோக்கியதன் விளைவாக, நளின் என்பவனிடம் அது கடன் வாங்கியதுடன் Top Attires உழைத்த இலாபத்தின் விகிதத்திற்கேற்ப வட்டியுடன் கடனானது திரும்பிச் செலுததப்பட்டது. Top Attires இன் தான் பங்காளனொருவனாக ஆகிவிட்டதாக நளின் பின்னர் கோரினான். டேவிட் தனது சகோதரன் ஸ்டாலின் என்பவனை பங்காளரொருவனாகக் கொண்டு வர விரும்பினாயினும் ஸ்டாலின் ஒரு நேர்மறையாக பிரபலமடைந்த வியாபாரி என்பதன் அடிப்படையில் ஏனைய பங்காளர்கள் அதை எதிர்த்தனர். பின்னர், அருளும் பானுவும் டேவிட் ஒழுக்கநெறிக்கு முரணான குணங்களைக் கொண்டிருப்பதனைக் கண்டு டேவிட்டை பங்குடமையில் இருந்து அகற்ற விரும்பினர்.

நியதிச் சட்ட ஆதாரங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளின் ஆதாரங்களுடன் மேற்கண்ட சூழ்நிலைகளில் எழுகின்றதான சட்டச் சிக்கல்களை ஆராய்க.

(25 புள்ளிகள்)

7. கணனிகளை உற்பத்தி செய்யும் கம்பனியொன்றான 5 உறுப்பினர் சபையைக் கொண்ட Speed Codes Ltd (கம்பனி) என்பதில் டிரான் மற்றும் ஹேமால் என்பவர்கள் இயக்குனர்களாவர். நிர்வாக இயக்குனரான டிரான் கணனிகளை விநியோகம் செய்வதற்காக கம்பனி சார்பாக Comtop Ltd என்ற கம்பனியுடன் ஒப்பந்தமொன்றில் ஈடுபடுகிறான். Comtop Ltd இல் இருந்து டிரான் ஒரு குறிப்பிடத்தக்க தரகுப் பணத்தினைப் பெறுகின்றானாயினும் அதனை அவன் இயக்குனர் சபையிடமிருந்து மறைக்கின்றான். ஹேமால் கணனிகள் மற்றும் மடிக்கணனிகளை விற்கும் தனது சொந்த கம்பனியொன்றை ஏனைய இயக்குனர்களுக்குத்

தெரியாமல் நடாத்துகிறான். கம்பனி தனது ரூபா 75 மில்லின் பெறுமதியான வணிக காணிகளில் ஒன்றினை ரூபா 70 மில்லியனுக்கு ஹேமாலின் தந்தைக்கு விற்கின்றது.

COVID 19 இன் தோற்றத்தின் பின்னர் கம்பனி நிதிநெருக்கடிகளை எதிர்நோக்குகின்றது. ஊழியர்களுக்குக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பதுடன் கடன்காரர்களுக்குச் செலுத்த வேண்டியதான நிதியிலும் பற்றாக்குறையேற்பட்டது. ஏனைய இயக்குனர்கள் கம்பனியைக் கலைப்பதற்கு அலோசனை வழங்கிய அதேவேளை டிரான் இயக்குனர் சபையை ஆலோசிக்காமல் வங்கியொன்றிடமிருந்து கடன் பெறுகிறான். கம்பனி தொடர்ந்து இயங்குவதற்கான நிதியை வழங்கும் பொருட்டு டிரான், அக்கம்பனிக்குச் சொந்தமான கட்டிடங்களிலொன்றை வாங்க விருப்புவதான தனது ஆலோசனையைத் தெரிவிக்கிறான். இதன் விளைவாக, ரூபா 50 மில்லியன் பெறுமதியான கட்டிடம் ரூபா 40 மில்லியனுக்கு டிரானுக்கு விற்கப்பட்டது. குறைந்த விலை குறித்து இயக்குனர் சபை கவலையடைந்த போதிலும் கம்பனியின் நிதி நிலமையை மேம்படுத்தும் முயற்சியொன்றாக அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

பொருத்தமான ஆதாரங்களுடன் மேற்கண்ட சூழ்நிலையில் இயக்குனர்களின் தனிபட்ட கடப்பாடுகளையும் மற்றும் இயக்குனர் சபையின் பொறுப்புடைமையையும் மதிப்பீடு செய்க.

(25 புள்ளிகள்)